டிஎம்ஐ பினான்ஸ் பிரைவேட் லிமிடெட்

## பொறுப்பேற்பு

1. இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள குறுகிய கால தனிநபர் கடனுக்கான ஒரு நிதி வசதிக்கு (நிதி வசதி) நான்/நாங்கள் இதன்மூலம் விண்ணப்பிக்கிறோம். இந்த விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்ட/பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விவரங்களும் தகவல்களும் உண்மையானவை, முழுவதுமானவை மேலும் எல்லா வகையிலும் தற்போதைய நிலையில் உள்ளவை, மற்றும் எந்தக் தகவலும் பதுக்கப்படவில்லை என்றும் அறிவிக்கிறோம். டிஎம்ஐ ஃபினான்ஸ் பிரைவேட் லிமிடட் (டிஎம்ஐ) எனக்கோ/எங்களுக்கோ தர தீர்மானிக்கும் எந்தக் கடனுக்கும், இந்த விண்ணப்பத்தில் நாங்கள் தந்திருக்கும் விவரங்கள் அடிப்படையாக அமையும் என்பதை நான்/நாங்கள் புரிந்து கொள்கிறோம். நான்/நாங்கள் தவறான அல்லது முழுமையற்ற தகவல்களைத் தந்திருக்கிறோம், அல்லது மோசடியான அல்லது போலி ஆவணங்களைத் தந்திருக்கிறோம் என்று இந்த விண்ணப்பத்தைச் செயல்முறைப் படுத்தும் எந்த நிலையிலாவது டிஎம்ஐ-க்கு தெரிய நேர்ந்தால், அவை என்னால்/எங்களால் சூழ்ச்சி நோக்கத்துடன் செய்யப்பபட்டன என்று டிஎம்ஐ-ஆல் கருதப்படும் . மேலும் இந்தக் கடன் விண்ணப்பத்தை உடனடியாக மறுதலிக்கவும், இசைவாணையையும், தொடர்ந்த கடன் வழங்குகளையும் எந்தக்காரணமும் அளிக்காமல் ரத்து செய்யவும், கொடுத்த கடனைத் திரும்பப் பெறவும் டிஎம்ஐ-க்கு அதிகாரம் உண்டு.
2. அத்தகைய மறுதலிப்புக்கோ அல்லது அந்த மறுதலிப்பை எனக்கோ/எங்களுக்கோ தெரிவிப்பதில் ஏற்படும் தாமதத்திற்கோ (ரத்து செய்யப்படுவ்தற்கு முன் நான்/நாங்கள் ஏதாவது விற்பனையாளருக்கோ/சேவை வழங்குபவருக்கோ பணம் செலுத்தியிருப்பது உட்பட) டிஎம்ஐ மற்றும் அதன் ஊழியர்கள்/ பிரதிநிதிகள்/முகவர்கள்/சேவை வழங்குபவர்கள் எந்த விதத்திலும் எனக்கு/எங்களுக்கு பொறுப்பு ஏற்கவோ கட்டுப்பட்டவர்களோ ஆக மாட்டார்கள்.
3. டிஎம்ஐ மற்ற வழிகள்/முகவர்களிடமிருந்தும் தனிப்பட்ட தகவல்களைப் பெறுவார்கள் என்று நான்/நாங்கள் புரிந்து கொள்கிறோம். அது குறித்து எனக்கோ/எங்களுக்கோ எந்த ஆட்சேபணையும் இல்லை. தேவைப்படும் பட்சத்தில் இந்த விண்ணப்பத்தில் உள்ள விவரங்கள் சம்பந்தமாக, நான்/நாங்கள் வங்கிக்கணக்குகள் வைத்திருக்கும் வங்கிகள் உட்பட, விசாரிக்கவும் குறிப்பு விளக்கம் கேட்கவும் டிஎம்ஐ-க்கு நாங்கள் அதிகாரம் அளிக்கிறோம்.டிஎம்ஐ கொள்கைகளுக்கு உட்பட்டும், உரிய சட்டங்களின் தேவைகளுக்கும் ஏற்ப, இந்த கடன் உதவி வழங்குவதற்காக, கேஓய்சி சம்பந்தப்பட்ட விஷயங்களுக்காக ஆதார் அட்டை/விவரங்களை உபயோகிக்க நான்/நாங்கள் இதன்மூலம் சுய விருப்பத்தோடு ஒப்புதல் அளிக்கிறோம். என்/எங்களின் ஆதார் விவரங்கள், பான் எண்/எனது/எங்களது பான் அட்டை நகல் , வேறு அடையாள ஆதாரங்கள், வாங்கிக் கணக்கு விவரங்கள் போன்றவற்றை அவ்வப்போது பெற்றுக் கொள்ளவும், பரிமாற்றம் செய்து கொள்ளவும், என் /எங்கள் கடன் விவரங்களையும், திருப்பிக்கட்டும் விவரங்களையும் மற்ற வங்கிகள்/நிதி நிறுவனங்கள்/சிபில் போன்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும், அவ்வப்போது சிபில், எக்ஸ்பீரியன், ஹண்ட்டர் மற்றும் அது போன்ற தேவையான அறிக்கைகளை உருவாக்கிக் கொள்ளவும், பெறவும், டிஎம்ஐ-க்கு நாங்கள் எங்கள் ஒப்புதலை அளிக்கிறோம் மேலும் இந்த விவரங்கள் உபயோகப் படுத்தப் படுவதற்கு டிஎம்ஐ-ஐ கடப்பாடு உடையவர்களாக நிலைநிறுத்த மாட்டோம். என் /எங்களின் தனிப்பட்ட எந்த வகையான விவரத்தையும் நேரடியாகவோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகவோ சேகரிக்கவும், சேர்த்து வைக்கவும், பகிரவும், பெறவும், உறுதிப்படுத்தவும், அந்த விவரங்களை அதன் முகவர்கள்/ஒப்பந்தக்காரர்கள்/ சேவை வழங்குபவர்கள் போன்றவர்களுக்கு வெளிப்படுத்தவும், மேலும் அந்த விவரங்களை கேஓய்சி சான்றளிப்பு, இந்த நிதி வசதி வழங்குதல் மற்றும் டிஎம்ஐ-யின் வணிகத்தின் உள் மதிப்பீட்டுக்காக உபயோகிக்கவும் நான்/நாங்கள் வெளிப்படையாகவும் முறிக்க முடியாத வகையிலும் டிஎம்ஐ-க்கு அதிகாரம் அளிக்கிறோம். மேலும் விவரங்களுக்கு இங்கு சொடுக்கவும். https://www.dmifinance.in/privacy-policy.html.
4. பொருந்தக்கூடிய சட்டங்களின் கீழ் மற்றும் டி.எம்.ஐ (DMI) கொள்கைகளின்படி, தேவைப்படும் நோக்கங்களுக்காக, CERSAI இலிருந்து CKYC ஐப் பெறுவதற்கான நோக்கங்களுக்காக, பான் (PAN) அல்லது ஆதார் (AADHAAR) அட்டை/விவரங்களைப் பயன்படுத்துவதற்கு நான்/நாங்கள் தானாக முன்வந்து எனது/எங்கள் ஒப்புதலை வழங்குகிறோம். எனது ஆதார் விவரங்கள், பான் (PAN) எண்/எனது பான் கார்டின் நகல், பிற அடையாளச் சான்று மற்றும் வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவற்றைக் கொள்கையின்படி பயன்படுத்துவதற்கு அவ்வப்போது டி.எம்.ஐ. (DMI)க்கு நாங்கள் ஒப்புதல் அளிக்கிறோம். இந்த தகவலைப் பயன்படுத்துவதற்கு டி.எம்.ஐ. (DMI) பொறுப்பு ஏற்காது. CERSAI இலிருந்து நேரடியாக எனது/எங்கள் தனிப்பட்ட தகவலின் எந்தவொரு அம்சத்தையும் சேகரிக்க, சேமிக்க, பகிர, பெற மற்றும் அங்கீகரிக்க டி.எம்.ஐ. (DMI) நான்/நாங்கள் வெளிப்படையாகவும் மாற்றமுடியாமலும் அங்கீகரிக்க செய்கிறேன். அத்தகைய தகவலை அதன் முகவர்கள்/ஒப்பந்ததாரர்கள்/சேவை வழங்குநர்களுக்கு வெளிப்படுத்தவும் மற்றும் KYC அங்கீகாரம், வசதிக்கான மானியம் மற்றும் அதன் வணிகத்தின் டி.எம்.ஐ. (DMI) இன் உள் மதிப்பீட்டிற்காக அத்தகைய தகவலைப் பயன்படுத்தவும் அங்கீகரிக்கிறேன்.
5. இந்த விண்ணப்பப் படிவத்தில் நான்/நாங்கள் வழங்கிய மொபைல் எண்(கள்) இந்த வசதியைப் பெறுவதற்கு எனது/எங்கள் ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை நான்/நாங்கள் இதன் மூலம் உறுதிசெய்து உத்தரவாதம் அளிக்கிறோம்.
6. இந்த உறுதியேற்பு அல்லது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள அலை பேசி எண்ணில், தொலைபேசி அழைப்புகள் மூலமாகவோ, அல்லது எஸ்எம்எஸ்/ வாட்ஸப் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது தகவல் தொடர்பு வழி மூலமாகவோ, பரிவர்த்தனை குறித்த விவரங்கள், டிஎம்ஐ வழங்கும் பலவித கடன் அழைப்புத் திட்டங்கள், அல்லது கடன் ஊக்குவிப்புத் திட்டங்கள் அல்லது வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் பற்றி நான்/நாங்கள் அறிய விருப்பப்படுவோம். அதற்கு இதன்மூலம் டிஎம்ஐ மற்றும் அதன் ஊழியர், முகவர், சார்பாளர் அவ்வாறு செய்ய அதிகாரம் அளிக்கிறோம். கோரப்படாத தகவல்கள் என்று நேஷனல் டூ நாட் கால் ரெஜிஸ்ட்ரி ("என்டிஎன்சி ரெஜிஸ்ட்ரி") –இல் குறிப்பிடப்பட்டுள்ளதும் டெலிகாம் ரெகுலேட்டரி அத்தாரிட்டி ஆப் இந்தியா-வால் வகுத்தமைக்கப்பட்டதுமான சட்டங்கள், டிஎம்ஐ, அதன் ஊழியர்கள், முகவர்கள் மற்றும்/அல்லது சார்பாளர்களிடமிடருந்து வரும் இத்தகைய தகவல்கள்/ அழைப்புகள்/ எஸ்எம்எஸ்/ வாட்ஸப் செய்திகளுக்குப் பொருந்தாது.
7. மூலாக்கக் கூட்டாளியும் டிஎம்ஐ-யும் ஒருவருக்கொருவர் சம்பந்தப்படாத தற்சார்புடையவர்கள் என்பதை நான்/நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். டிஎம்ஐ-யினால் ஒப்புதல் அளிக்கப்படாத/ பட்டுவாடா செய்யப்படாத, மூலாக்கக் கூட்டாளியால் ஏற்பாடு செய்யப்பட்ட/தரப்பட்ட எந்த கடன் அல்லது வேறு வசதிகள் குறித்து எனக்கோ/எங்களுக்கோ டிஎம்ஐ மீது எந்த எதிர் பாத்தியத்தையும் இருக்காது. மூலாக்கக் கூட்டாளி வழங்கும் எந்த உருவாக்கம் மற்றும் சேவைகளுக்கு டிஎம்ஐ எந்த முறையீடு, உறுதி, அறிக்கை அல்லது ஏற்பிசைவும் வழங்காது, மேலும் அது குறித்து எந்த விதத்திலும் பொறுப்பு ஏற்கவோ, கடப்பாடு உடையதாகவோ இருக்காது என்பதை நான் ஏற்கிறேன்.

8. எனக்கோ/எங்களுக்கோ இந்த விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை அல்லது அவ்வப்போது டிஎம்ஜ-க்குத் தேவைப்படும் விவரங்களைத் தராமல் இருக்கும் விருப்புரிமை உள்ளது என்று தெரியும். எங்களது அந்த விருப்புரிமை, டிஎம்ஜ எங்களுக்கு அளித்துள்ள ஒப்புதலை ரத்து செய்யவும் அல்லது நிலுவையில் உள்ள தொகைகளை, ஜிசியின் நியதிகளின்படி முன்கூட்டியே செலுத்தும்படி எங்களிடம் கேட்கவும் அதற்கு உரிமை தரும்.
9. நான்/நாங்கள் இந்த விண்ணப்பப் படிவத்தைப் பெறுபவர்களுக்கு ரொக்கமாகவோ, பேரர் காசோலை மூலமாகவோ, வேறு எந்த விதத்திலோ இந்த விண்ணப்பப் படிவத்துடனோ அல்லது இது சம்பந்தமாகவோ, எந்தத் தொகையையும் செலுத்தவில்லை என்று அறிவிக்கிறோம். அப்படி ஏதாவது தொகையை இந்த விண்ணப்பப் படிவத்தைப் பெறுபவர்களுக்கு கொடுத்திருந்தால், அதற்கு நானோ/நாங்களோ டிஎம்ஜ அல்லது அதன் ஊழியர்கள்/பிரதிநிதிகள்/ முகவர்கள்/சேவை வழங்குபவர்களை பொறுப்பாக்க மாட்டோம்.
10. எனது மொத்த குடும்ப வருமானம் மாதத்திற்கு 25,000 ஐ விட அதிகமாக உள்ளது என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன்**.
11. நான் அரசியல் அமைப்பில் எந்தப் பதவியையும் வகிக்கவில்லை அல்லது மறைமுகமாக தொடர்புடையவன் அல்ல என்பதை இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.
12. இந்த விண்ணப்பப் படிவத்தின் விதிமுறைகள் நான்/நாங்கள் புரிந்து கொண்டோம் என்று நான்/நாங்கள் உறுதியளிக்கிறோம்.

** வீட்டுடமை என்பது ஒரு தனிப்பட்ட குடும்ப அலகு, அதாவது கணவன், மனைவி மற்றும் அவர்களது திருமணமாகாத குழந்தைகள்.கொண்ட அலகு.